Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.124/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 5,Page.No.42/2021

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்நாதன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ஆறுமுகம் | தொழில் | அரசு மருத்துவர் (ஓய்வு) |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 4th day of July 2023

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முன் விசாரணை.–** ( 1ம் எதிரி அருண்குமார், 3ம் எதிரி அருண், ஆஜரில் உள்ளார்கள், 2ம் எதிரி முத்துவேல் மனுவின் பேரில் ஆஜரில் இல்லை)

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து, தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 14.06.2018 அன்று மதயம் 02.15 மணியளவில் சிதிக் த/பெ சாதிக்பாஷா என்பவர் தன்னை 4 ஆண்கள் கைகளாலும், செங்கற்களாலும் முகத்தில் அடித்து காயம் ஏற்படுத்தியதாக தெரிவித்தார். மேற்படி சம்பவம் சுமார் 1 1/2 மணியளவில் அண்ணாநகரில் நடந்ததாக தெரிவித்தார். பின்பு அவரை பரிசோதித்ததில் முன் பற்களில் 4 பற்கள் இல்லாமல் இருந்தது. பின்பு அவருக்கு சிகிச்சை அளித்து உள்நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் 16.06.2018 அன்று மருத்துவமனையில் இருந்து தலைமறைவாகிவிட்டார். பின்னர் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துக்கொண்டு மேற்படி சாதிக் என்பவரின் காயச்சான்றிதழ் மற்றும் விபத்துப்பதிவேடு பெற்றுச்சென்றார்கள். **அந்த காயச்சான்றிதழ் மற்றும் விபத்துப்பதிவேடு முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.–**

காயம்பட்டவரின் முன் பற்களில் 4 பற்கள் இல்லை என்பதற்கு அது பழைய காயமாக கூட இருக்கலாம் என்றால், காயம்பட்டவர் மருத்துவமனையில் இருந்து தலைமறைவாகிவிட்டதால் அவரை முலுவதும் பரிசோதித்து பல்மருத்துவரால் காயம் குறித்து கருத்து வழங்க இயலவில்லை. நான் பல் மருத்துவ நிபுனர்இல்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு சுமார் 21 வயது இருக்கும். கால் தடுக்கி சுவற்றில் மோதிக்கொண்டாலும் அல்லது கீழே விழுந்தாலும் மேற்கண்டவாறு முன்பற்களில் 4 பற்கள் உடைய வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

மறு விசாரணை இல்லை.

Signature of Witness.